2008 ஏப்ரல் 16]

அவர்களே, உறுப்பினர் அவர்கள் கடைசியாகச் சொன்னதை மட்டும் கேட்டிருக்கலாம். பொதுவாக ஏரிகளைத் தூர் வாருவதை ஆண்டுக்காண்டு maintenance நிதியிலேயிருந்து செய்கிறோம். உலக வங்கியின் நிதியை வாங்கி, 5,000 ஏரிகளைத் தூர் வாருவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, ஒவ்வொரு basin-களாக எடுத்து, பணியாற்றிக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து, அவருடைய தொகுதி சம்பந்தப்பட்டது. அதுகுறித்து அவர்கள் தனியாகக் கடிதம் தந்தால், அவை எந்த நிலையில் இருக்கின்றன என்பதை நான் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. துரைராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

104—

பேருந்து வசதி

***29844—திரு. சி. துரைராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், வருசநாடு, மயிலாடும்பாறை முதல் மதுரை மாவட்டம், மள்ளப்புரம், ஏழுமலை வழியாக உசிலம்பட்டிக்கு மலைச் சாலையில் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வருசநாடு-உசிலம்பட்டி வழித்தடத்தில் தாழையூத்து முதல் மல்லப்புரம் வரையிலான மலைவழிச் சாலை வனத் துறைக்குச் சொந்தமானதாகும். மேலும், மேற்படி சாலை பல இடங்களில் மிகவும் குறுகலாகவும், குறுகிய வளைவுகளாகவும், தடுப்புச் சுவர்கள் இன்றியும் சாலையில் அரிப்பு ஏற்பட்டு, பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே, மேற்படி மலைவழிச் சாலையைச் செப்பனிட்டுச் சரி செய்தபின், பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. துரைராஜ்.

[2008 ஏப்ரல் 16

திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லப்புரம்-மயிலாடும்பாறை சாலை என்பது, சுமார் 23 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இதில் 16 கிலோ மீட்டர் தூரம் மலைப் பகுதியில் அமைந்துள்ளது. இதிலே 14 கிலோ மீட்டர் தூரம் நெடுஞ்சாலைத் துறையினுடைய கட்டுப்பாட்டில் உள்ளது. மீதமுள்ள 2 கிலோ மீட்டர் தூரம் வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. கடந்த காலங்களில் அந்தச் சாலை வழியாகப் பேருந்து இயக்குவதற்கு அனுமதி கேட்டபோது, அங்கே சாம்பல் நிற அணில்கள் இருக்கின்ற காரணத்தினால், தார்ச் சாலை அமைக்க இயலாது, பேருந்து செல்ல அனுமதிக்க முடியாது என்று வனத் துறையினர் சொன்னதன்பேரில், உரிய அதிகாரிகளிடம் அனுமதி கேட்டு, அந்த இரண்டு கிலோ மீட்டர் தூரமுள்ள சாலையை சிமெண்ட் சாலையாக அமைத்து, கடந்த ஆட்சியின்போது, சோதனை ஓட்டமாக ஒரு வார காலத்திற்குப் பேருந்து இயக்கப்பட்டது. பெரிய பேருந்துகளாக இருக்கின்ற காரணத்தினால், வளைவுகளில் பேருந்துகளை இயக்க இயலவில்லை. சிறிய பேருந்துகளாக இருந்தால் இயக்கலாம் என்று போக்குவரத்துத் துறையின் தேனி கோட்டத்தினுடைய மேலாளர் அவர்கள் கூறியதன்பேரில், ஒரு வார காலத்திற்குப் பேருந்து இயக்கப்பட்டு, நிறுத்தப்பட்ட நிலையில் உள்ளது. எனவே, தினமும் அந்தச் சாலையின் வழியாகத் தனியாருக்குச் சொந்தமான மினி வேன்களில் சுமார் பத்துக்கும் மேற்பட்ட seated வேன்களில் ஆயிரக்கணக்கானோர் பயணம் செய்கிறார்கள். அந்தச் சாலை இரண்டு மாவட்டங்களையும் இணைக்கின்ற ஒரு முக்கியமான சாலையாகும். எனவே, பொது மக்களுடைய நன்மையைக் கருதி, மலைப் பகுதிகளில் செல்கின்ற சிறிய பேருந்துகளைப்போல சிறிய பேருந்துகளைவிட்டு, மக்களுடைய போக்குவரத்துப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி-மயிலாடும்பாறை-வருசநாடு ஆகிய வழித்தடங்களில், உசிலம்பட்டியிலிருந்து அரசு மற்றும் தனியார் பேருந்துகள்மூலம் தினசரி 16 நடைகள் நேரடிப் பேருந்து வசதி கடமலைக்குண்டு விலக்கு வழியாக உள்ளது. கடமலைக்குண்டு விலக்கு மற்றும் தேனியிலிருந்து மயிலாடும்பாறை மற்றும் வருசநாடு ஆகிய இடங்களுக்கு 124 நடைகள் நேரடிப் பேருந்து வசதிகள் உள்ளன.

2008 ஏப்ரல் 16]

வருசநாடு-உசிலம்பட்டி வழித்தடத்தில் தாழையூத்து முதல் மல்லப்புரம் வரையிலான 11 கிலோ மீட்டர் தூரமுள்ள மலைவழிச் சாலை, வனத் துறைக்குச் சொந்தமானதாகும். மேற்படி சாலை பல இடங்களில் மிகவும் குறுகியதாகவும், குறுகிய வளைவுகளாகவும் உள்ளதால்தான் பேருந்துகளை இயக்க முடியாத நிலை இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த வாரம் நம்முடைய அதிகாரிகளை அங்கு அனுப்பி, பேருந்து இயக்குவதற்கு எந்த அளவிற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை அறிந்து, சிறிய பேருந்துகளாக ஓட்டமுடியும் என்று கருதினால், இந்த முறை பேருந்துகளை வாங்குகின்றபோது, சிறிய பேருந்துகளையும் வாங்கி, தங்கள் பகுதிக்குப் பேருந்து வசதி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. துரைராஜ். நன்றி சொல்லிவிட்டு, உட்காருங்கள். வேறென்ன வேண்டும்? பேருந்து வசதி செய்து தரப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள் அல்லவா?

திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியிலேயிருந்து மயிலாடும்பாறைக்குச் செல்வதாக இருந்தால், சுமார் 65 முதல் 70 கிலோ மீட்டர் தூரம் ஆகும். அதாவது, கடமலைக்குண்டு விலக்கு, கண்டமனூர் விலக்கு, கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை வழியாக மேற்கண்ட இடங்களுக்குச் செல்வதற்கு சுமார் 65 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். நான் சொல்கின்ற பாதையிலே, மல்லப்புரம், மயிலாடும்பாறை வழியாகச் செல்வதாக இருந்தால், உசிலம்பட்டியிலேயிருந்து சுமார் 45 கிலோ மீட்டர் தூரம்தான் செல்லவேண்டியிருக்கும். எனவே, எரிபொருள் சிக்கனம், போக்குவரத்துப் பயணத்தினுடைய நேரக் குறைவு இவற்றையெல்லாம் மனதிலேகொண்டு, நம்முடைய அமைச்சர் அவர்களின் விரைவான நடவடிக்கையின்மூலம் அந்தப் பகுதியிலே பேருந்து இயக்குவதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-00

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியிலிருந்து ஏழுமலை, ஏழுமலையிலிருந்து எம்.

கல்லுப்பட்டி, பின்னர், மல்லப்புரம், தாழையூத்து, முத்தாலம்பாறை, மூலக்கடை, மயிலாடும்பாறை என்று அந்த மயிலாடும்பாறை என்ற அந்தப் பாதை இப்பொழுது குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதுபோல அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, சரியாக இருக்குமானால் பேருந்து இயக்குவதற்குரிய முயற்சியை இந்த அரசு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.*

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாக, சென்னை மாநகரத்திலே இருக்கிற சுற்றுலாத் தலங்களைப் பார்ப்பதற்கும், அதேபோல, சென்னையிலிருந்து மகாபலிபுரம், பாண்டிச்சேரி வரை சுற்றுலாப் பேருந்து இயக்குவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா, அப்படி இயக்கினால் அரசுக்கு நல்ல வருவாய் கிடைக்கும். அது குறித்து அமைச்சருடைய பதிலைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நீலகிரி மாவட்டம், ஊட்டியிலே ஒரு பேருந்து இப்பொழுது கோவை போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக முழுமையாகக் கண்ணாடி இழைகளால் body-கள் கட்டப்பட்டு இப்போது இயக்கப்பட்டு வருகின்றது. சென்னையிலே இருக்கின்ற, இங்கு வந்திருக்கிற சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்காக hop on-hop off என்ற வகையிலே பெரியார் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக 5 பேருந்துகளுக்கு இப்பொழுது கூண்டு கட்டிக்கொண்டிருக்கிறார்கள். விரைவிலே அது இயக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*